
ஜாக்சன்வில் தமிழ் பள்ளியின் பருவ இதழ்

# மயிலிறகு

வாழ்க தமிழ்! வளர்க தமிழினம்!

மயில் 1, இறகு 3, 08 /07/2020





## 74வது ஆண்டு சுதந்திர தினம்

## வாசித்து பழக – சிறு கதைகள்





## தமிழகம் - பாரம்பரியக் கலைகள்

# பதிப்பாசிரியர் குழுவிடமிருந்து..

அனைவருக்கும் வணக்கம்!

உலகையே உலுக்கிக்கொண்டிருகிறது கொரோனா. சர்வதேச பரவல் சூழ்நிலையில் அனைவரும் நலமுடனும், பாதுகாப்புடனும் இருப்பீர்கள் என நம்புகிறோம். நமது இதழ் சிறு தடங்கலுக்கு பின் மீண்டும் உங்களை சந்திக்கவருவதில் பெரும் மகிழ்ச்சி. நமது நாடு சுதந்திரம் அடைந்து 74வது ஆண்டு இது. மேலும் இதுபற்றிய விபரங்கள் உள்ளே காண்போம்.

அனைவரின் பங்களிப்பு பெருகியுள்ளதை எண்ணி, மகிழ்ச்சி அடைகிறோம். இருப்பினும், மேலும் பலர் இதில் பங்குகொள்ளும் படி கேட்டுக் கொள்கிறோம். பதிப்பில் உள்ள சில தகவல்கள் மட்டுமே இணைய தளத்தில் எடுக்கப்பட்டவை, மற்ற அனைத்தும் முற்றிலும் சுயமாக உருவாக்கப்பட்டவை. எனவே இந்த இதழுக்கு சற்று நேரம் ஒதுக்கி, காபி பிரேக்கிலோ அல்லது ஜிம் பிரேக்கிலோ படிக்கும் படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்

வெளியிட உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி!

# உள்ளே...


- 74வது சுதந்திர தினம்
- உங்கள் பிறந்த நாள் அன்று என்ன விசேஷம்?
- சித்திரம் பேசுதடி
- விளையாடு வினையாக்கு
- வாசித்து பழக - சிறு கதைகள்
- தமிழகம் - பாரம்பரிய கலைகள்
- செய்திகள்

# உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

உலகமெங்கும் எண்ணற்ற தினங்கள் கொண்டாடப்படுகின்றன. அவரவர் பிறந்த நாள் அன்று உலகம் எதை கொண்டாடுகிறது என்பதை நம் மாணவர்கள் அறிய கீழே பாருங்கள்!

## மார்ச்

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| சந்தியா குமார் | 24-Mar | தேசிய சீஸ்கேக் தினம் |
| அஸ்வின் சுரேஷ் | 17-Mar | புனித பாட்ரிக் தினம் |
| மித்ரா வசந்தன் | 11-Mar | தேசிய இறுதி இயக்குநர் மற்றும் மோர்டீசியன் அங்கீகாரம் நாள் |
| இனியவன் செந்தில்ராஜேஷ் | 30-Mar | மருத்துவர்கள் தினம் |
| தக்ஷின் கார்த்திக் | 12-Mar | தேசிய பெண் சாரணர் தினம் |
| அஹ்சன் அப்துல் காதர் | 14-Mar | தேசிய உருளைக்கிழங்கு சிப் தினம் |
| ஆதர்வா பாலசுந்தர் | 30-Mar | மருத்துவர்கள் தினம் |
| | | |

## ஏப்ரல்

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| ஸ்மிருதி சேஷாத்ரி | 29-Apr | சர்வதேச நடன தினம் |
| ஸ்ரீ சாய் பிரணவ் ராஜா | 6-Apr | தேசிய மாணவர்-தடகள தினம் |
| பூஷிகா சரவணன் | 26-Apr | தேசிய பிரிட்ஸல் தினம் |
| பிரணவ் விஜயகுமார் | 30-Apr | நேர்மை நாள் |
| விகாஸ் சரவணன் | 1-Apr | தேசிய நடை நாள் |
| பிரணவ் ராஜீவ் நடராஜ் | 17-Apr | தேசிய சீஸ் பந்து நாள் |

# உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

## ஏப்ரல்

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| பிரணவிகா ஜெயராமன் | 25-Apr | சர்வதேச நடன தினம் |
| ஸ்வக்ஷா மனோஜ் | 4-Apr | கிங்மிங் விழா |
| சுதர்சன் செந்தில்குமார் | 4-Apr | கிங்மிங் விழா |
| கனிஷ்கா சீனிவாசன் | 27-Apr | தேசிய பிரதம விலா நாள் |
| மஹித் தர்ம சரவணன் | 3-Apr | உலக கட்சி தினம் |
| மாதினியா ரகுபதி | 27-Apr | தேசிய பிரதம விலா நாள் |
| தன்யாசா பாலாஜி | 24-Apr | தேசிய ஆர்பர் தினம் |
| அஸ்வத் பாலகனேஷ் | 16-Apr | தேசிய உயர் ஐந்து நாள் |

## மே

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| திவ்யா குமார் | 12-May | தேசிய லிமெரிக் தினம் |
| தீபன் ரமேஷ் | 7-May | தேசிய சுற்றுலா தினம் |
| வீக்ஷா செல்வேந்திரன் | 6-May | சர்வதேச உணவு முறை இல்லை |
| மனஸ்வினி மஞ்சேஷ் | 17-May | தேசிய வால்நட் தினம் |
| ஸ்ரீத்திக் சங்கர் | 28-May | தேசிய சன்ஸ்கிரீன் தினம் |
| திரினேத்ரா பிரவீன்குமார் | 19-May | தேசிய கேக் தினம் |
| ஹரினிதா சீனிவாசன் | 12-May | தேசிய லிமெரிக் தினம் |
| தியா பிரபாகரன் | 17-May | தேசிய வால்நட் தினம் |

# உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

## ஜூன்

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| ரிக்கிதா ரமேஷ் | 14-Jun | உலக இரத்த தானம் தினம் |
| ரோஹன் ஆனந்த் | 10-Jun | தேசிய பனிக்கட்டி தேநீர் தினம் |
| அஸ்வத் சுந்தர் | 5-Jun | உலக சுற்றுச்சூழல் தினம் |
| யுவகிருஷ்ணா மோகன்ராஜா | 17-Jun | தேசிய காய்கறி தினம் |
| ரூபசுந்தரி ஸ்ரீனிவாசன் | 3-Jun | உலக சைக்கிள் தினம் |
| விருந்தன் கார்த்திகேயன் | 8-Jun | உலக பெருங்கடல் தினம் |
| ஹிமானி ஜெயராமன் | 10-Jun | தேசிய பனிக்கட்டி தேநீர் தினம் |
| பவேஷ் செந்தில்குமார் | 27-Jun | தேசிய சன்கிளாசஸ் தினம் |
| தேஜஸ்வினி சரவணன் | 13-Jun | தேசிய ரோஸ் தினம் |
| அஸ்வத் நாராயண் வித்யாசாகர் | 23-Jun | தேசிய நீரேற்றம் நாள் |
| தக்ஷன் மணிகண்டன் | 10-Jun | தேசிய பனிக்கட்டி தேநீர் தினம் |
| சக்தி சேஷாத்ரி | 16-Jun | தேசிய ஃபட்ஜ் நாள் |
| மானசா சதீஷ் | 17-Jun | தேசிய காய்கறி தினம் |
| சஞ்சனா சுதாகர் | 10-Jun | தேசிய பனிக்கட்டி தேநீர் தினம் |
| வைபவ் பிரபாகரன் | 15-Jun | உலக முதியோர் விழிப்புணர்வு நாள் |

# உங்கள் பிறந்த நாள் அன்று என்ன தினம்?

## ஜூலை

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| ஆரிதி ராஜேந்திரன் | 13-Jul | தேசிய பிரஞ்சு பொரியல் நாள் |
| பிரணிதா பாலவிஜயலட்சுமணன் | 10-Jul | தேசிய பூனைக்குட்டி நாள் |
| பிரஜன்சாய் பாலாஜி | 9-Jul | தேசிய சர்க்கரை குக்கீ தினம் |
| அனந்த் அருணாசலம் | 7-Jul | தேசிய ஸ்ட்ராபெரி சண்டே தினம் |
| சுஜய் சுரேஷ் | 3-Jul | சூரிய தினத்திலிருந்து தேசிய தங்குமிடம் |
| ஆதர்ஷ் சுந்தரபாண்டியன் | 14-Jul | மாடு பாராட்டு நாள் |
| பிரதிக்ஷ ஜெயபாலகண்ணன் | 3-Jul | சூரிய தினத்திலிருந்து தேசிய தங்குமிடம் |
| யதுநந்தன் பார்த்திபன் | 11-Jul | உலக மக்கள் தொகை தினம் |

## ஆகஸ்ட்

| பெயர் | தேதி | விசேஷம் |
|---|---|---|
| அத்விகா ராதாமுகுண்டன் | 30-Aug | தேசிய கடற்கரை தினம் |
| திருமுகேலன் செந்தில்குமார் ராமானுஜம் | 20-Aug | தேசிய லெமனேட் தினம் |
| அக்ஷரா ராமசாமி | 19-Aug | தேசிய உருளைக்கிழங்கு தினம் |
| அவந்திகா ஐயங்கார் | 2-Aug | தேசிய நட்பு தினம் |
| வென்பா கார்த்திகேயன் | 21-Aug | தேசிய மூத்த குடிமக்கள் தினம் |
| வத்சல்யா தனஞ்சயன் | 14-Aug | பாகிஸ்தான் சுதந்திர தினம் |
| பருஷ்ன் ராஜசிம்மன் | 11-Aug | தேசிய மகன் மற்றும் மகள் தினம் |

# 74-வது ஆண்டு சுதந்திர தினம்




இந்தியாவின் 74-வது ஆண்டு சுதந்திர தினம் ஆகஸ்ட் 15-ம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இந்திய 1947ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் நாள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை ஆனது. இந்த நாளை சிறப்பிக்கும் விதமாக இந்தியா முழுவதும் அரசு விடுமுறை. நாடெங்கும் அனைவரும் தேசியக்கொடி ஏற்றி மரியாதை செலுத்தி கொண்டாடுவார்கள் .இப்பொழுது உலகமெங்கும் உள்ள இந்தியர்கள் அனைவரும் இந்த நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்கிறார்கள்.

**இந்தியா சுதந்திரம் அடைய தேசத் தலைவர்களின் பங்களிப்பு**..!!

ஆங்கிலேயர்கள், இந்தியாவில் இருந்து வாணிகம் செய்து வந்ததோடு மட்டுமல்லாமல், அப்போதைய முகலாய பேரரசர் ஜெஹாங்கிரின் அனுமதிப் பெற்ற பின்னர், இந்தியாவைத் தலைமையிடமாகக் கொண்டு அவர்களது கிழக்கிந்திய கம்பெனியையும் நிறுவினர்.

* 1757 ஆம் ஆண்டு ‘பிளாசி யுத்தம்’ தொடங்கியது. இதில், நவாப் ஆங்கிலேயர்களிடம் தோல்வியுற்றதால், அவர்கள் இந்தியாவில் உள்ள நிலங்களை ஆக்கிரமிக்கத் துவங்கினர். இதையடுத்து, 1764 ஆம் ஆண்டில் பக்சார் போரிலும் வெற்றிப் பெற்று, வங்காளத்தை ஆட்சி செய்ய அப்போதைய முகலாயப் பேரரசரிடம் அனுமதி பெற்றதால், இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் வர அதுவே, முதன்முதல் காரணமாக இருந்தது.

* ஆங்கிலேயர்கள் ஒருபுறம் தனது ஆதிக்கத்தை மேலோங்கச் செய்து கொண்டே இருந்தாலும், நமது இந்தியர்கள் ‘முதல் இந்தியப் போரைத்’ தொடர்ந்து, பல போராட்டங்களிலும், கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டே இருந்தனர்.

* 1914ல் ‘முதல் உலகப் போர்’ ஆரம்பமானது. ஆங்கிலேயர்கள் நமது இந்தியாவில் ஆட்சி செய்து கொண்டிருந்ததால், அவர்களது போர் முயற்சிகளுக்கு நமது இந்தியா பெருமளவில் பங்களித்தது.

*இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்காவிற்கு சட்டம் படிக்க சென்று அங்கு நிறவெறிக்கு எதிராக போராடிக்கொண்டிருந்த தலைவர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, 1915ம் ஆண்டு அவர் சட்டபடிப்பு முடித்து விட்டு இந்தியா திரும்பி வந்தார்.

* ஜாலியன் வாலாபாக் படுகொலை, இரண்டாக பிளவுற்ற காங்கிரஸ் கட்சி, போராட்டங்கள், கிளர்ச்சிகள் எனப் பிரிந்திருந்த இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தது. 1920 ஆம் ஆண்டில், ‘கிலாபாத்’, ‘ஒத்துழையாமை இயக்கம்’, ‘.

கம்யூனிஸ்ட் கட்சி', 'அகில இந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ்' போன்றவைகள் உதயமானது.

* 1930 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களை எதிர்த்த பகத்சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகிய மூவரும் தூக்கிலிடப்பட்டனர். இந்திய சுதந்திரத்திற்காகப் பல போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் எழுப்பியத் தலைவர்களும், புரட்சியாளர்களும் சிறிதளவு கூட களைப்படையவில்லை.

* 1943 ஆம் ஆண்டில், நேதாஜி இந்திய ராணுவத்தை, தென்கிழக்காசியாவில் நாடுகடத்தப்பட்ட இந்திய தேசபக்தர்களை கொண்டு ஜாப்பான்
உதவியுடன் உருவாக்கினார்.

* 1947 ஆம் ஆண்டில், பிரித்தானிய இந்திய கவர்னர்-ஜெனரலான விஸ்கவுண்ட் லூயி மவுண்ட்பேட்டன் அவர்கள், ஜூன் 3 ஆம் தேதியன்று 'பிரித்தானிய இந்தியப் பேரரசை மதச்சார்பற்ற இந்தியா' என்றும், 'முஸ்லீம் பாகிஸ்தான்' என்றும் பிரித்தளிப்பதாக அறிவித்தார்.

* இந்தத் தேசப் பிரிவினையால், 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் தேதி பாகிஸ்தான் தனி தேசமாக பிரிந்துசென்றது. மேலும், இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் தேதி நள்ளிரவில், சுதந்திர தேசமானது

# சித்திரம் பேசுதடி..



ஷ்ரதா – நிலை 2




ஸ்ரீ ஓம் –நிலை 5




நிலை 1- ஸ்மரன்

# விளையாடு வினையாக்கு!

கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு படத்துக்கு இடையில் பத்து வித்தியாசங்களை கண்டு பிடிக்கவும்





கீழே உள்ள விடுகதைகளை கொண்டு விடைகளை கண்டு பிடிக்கவும்.

## விடுகதைகள்

1. கடைசி வார்த்தையில் மானம் உண்டு, முதல் வார்த்தையின் மென்மைக்காக இறந்தன பூச்சிகள். காஞ்சியில் நான் யார்?
2. படபடக்கும், பளபளக்கும், பண்டிகை வந்தால் வானில் பறக்கும். அது என்ன ?
3. ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள் அது என்ன?
4. உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?
5. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை. அது என்ன?

சென்ற இதழ் புதிர் விடைகள்

1.பட்டாசு,
2.மூச்சு,
3.பூரி,
4.காகம்,
5.வெண்டைக்காய்

rவிடைகளை padeekutty@yahoo.co.in என்ற முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பவும். சரியான விடை அளிப்பவருக்கு ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருக்கிறது.

வாசித்து பழக;

# சேவலும் இரத்தினக் கல்லும்



அது ஒரு அழகிய பனிக்காலம். சேவல் ஒன்று வழக்கம் போல் காலையில் எழுந்து அதற்கான உணவைத்தேட தன் நண்பர்களுடன் கிளம்பியது. அந்த சேவல் தொலைவில் ஒரு குப்பைக் கிடங்கை கண்டது.

அந்த குப்பைகேக் கிடங்கில் ஏதாவது உணவு கிடைக்குமா என்ற எண்ணத்துடன் கிளறத் தொடங்கியது.அப்போது அந்த சேவலுக்கு விலை மதிக்க முடியாத இரத்தினக்கல் ஒன்று கிடைத்தது. அதனை சேவல் திருப்பி திருப்பி பார்த்தது.

உடன் இருந்த சேவல் அதனிடம் வருத்தத்துடன் 'இது நமக்கு கிடைத்து என்ன பயன் ? ஒரு இரத்தினக்கல் வியாபாரியிடம் கிடைத்து இருந்தால் அவருக்கு இதன் விலை தெரியும். நமக்கோ இந்த கல்லை விட சிறிது தானியம் கிடைத்திருந்தால் அது தான் விலை மதிக்கத்தக்க பொருளாக இருந்து இருக்கும்", இந்தக் கல் நமக்கு உதவாது என்றது.

நீதி: ஒருவருக்கு பயன்படும் பொருளே அவர்களுக்குச் சிறந்ததாகும் .

# தமிழகம் - பாரம்பரியக் கலைகள்

## கரகாட்டம்:

இந்த இதழில் பாரம்பரியக் கலைகள் பகுதியில் கரகாட்டம் பற்றி சில குறிப்புகள்;



தமிழ் நாட்டின் தலை சிறந்த நாட்டுப்புற நடனங்களுள் கரகாட்டமும் ஒன்று. மண், செம்பு, பித்தளை போன்றவைகளால் வாய்ப்புறம் குவிந்து அடிப்புறம் பெருத்தும் காணப்படும் குடம் 'கரகம்' எனப்படும்.

நீர், அரிசி,மணல் போண்டவைகளால் நிரப்பபப்பட்டு வாய்ப்புறத்தை மூடி அலங்கரிக்கப்பட்ட குடத்தை தலையில் வைத்துக் கைகளால் பிடிக்காமல் நையாண்டி மேல இசைக்கு ஏற்ப ஆடும் ஆட்டம் கரகாட்டம் எனப்படும்







# செய்திகள்

➢ வரும் ஆகஸ்ட் 22ம் தேதி முதல் தமிழ் பள்ளி மீண்டும் திறக்கப்படும்.
.
➢ பாட புத்தகங்களை கார்களில் இருந்தப்படியே டிரைவ் த்ரூ முறையில் வாங்கிக்கொள்ளலாம்

➢ ஆகஸ்ட் 29ம் தேதி முதல் மாணவர்களுக்கு மெய்நிகர் முறையில் வகுப்புகள் தொடங்கும் எனத் தெரிவிக்கிறோம்

இதழை மேலும் சிறப்பிக்க உங்கள் உதவி மிகவும் அவசியம். உங்கள் கருத்துக்களையும், குறிப்புகளையும் மின்னஞ்சல் வழியாக தெரிவிக்கவும்.

மின்னஞ்சல் தொடர்பு:
kathiravanp@yahoo.com
Pradeekutty@yahoo.co.in